**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**9**ம் எதிரி ஆஜர் இல்லை**. 9**ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு**,** மனு அனுமதிக்கப்பட்டது**).**

**(3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

**Crl.M.P.No.1440/2024**ல் கடந்த **03.12.2024** அன்று பிறந்த உத்தரவின்பேரில்**,** சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு**, 1** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

01.10.2020 அன்று இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் நான் நியமனம் செய்யப்பட்டேன். எனக்கு முன்பு காவல் ஆய்வாளர் வழக்கை புலன்விசாரணை செய்து, தகவல்களை சேகரித்திருந்தார். முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆய்வாளர் சேகரித்த தகவல்களை தெரிந்துக்கொண்டு, புலன்விசாரணை ஆரம்பித்தேன் என்றால் அவைகளை பார்வையிட்டு, ஆரம்பித்தேன்.

அப்பல்லோ மருத்துவமனை மருத்துவர் பதிவு செய்த விபத்து பதிவேடு, இவ்வழக்கு சம்மந்தப்பட்ட முதல் ஆவணம் என்றால் சரியல்ல. அப்பல்லோ மருத்துவமனை மருத்துவ அதிகாரி விக்னேஸ்வரன் என்பவரை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர் பதிவு செய்த

விபத்து பதிவேட்டை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அந்த விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.19. அ.சா.ஆ.19 ல் காயம்பட்டவரை கொண்டு வந்தவர் தினேஷ் என எழுதப்பட்டுள்ளது. அ.சா.1 சஸ்மிதா காயம்பட்டவருடன் மருத்துவமனைக்கு வந்தார் என விபத்து பதிவேட்டில் எழுதப்படவில்லை. அதில் அடையாளம் தெரியாத இருநபர்களால் தாக்கப்பட்டார் என மருத்துவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தி, அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து இறந்துபோனார். அங்கிருந்து பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தி அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நேரம், அவர் இறந்த நேரம், அரசு மருத்துவமனையில் அவரது பிரேதத்தை சேர்த்த நேரம் ஆகியவற்றை தெரிந்துக்கொண்டேனா என்றால் ஆவணத்தின் அடிப்படையில் தெரிந்துக்கொண்டேன். பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன்.

அரசு மருத்துவமனையில் கிருஷ்ணமூர்த்தி பிரேதத்தை சேர்த்தபோது, பதிவு செய்யப்பட்ட அ.சா.ஆ.20 அடையாளம் தெரியாத நபரால் அனுமதிக்கப்பட்டார் என எழுதப்பட்டுள்ளது என்றால் மருத்துவரால் எழுதப்பட்டுள்ளது. அ.சா.ஆ.20 ல் கிருஷ்ணமூர்த்தி என்பவரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று, மருத்துவரால் பரிசோதித்த நேரம் 11.30 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனக்கு முன்பு புலன்விசாரணை செய்த ஆய்வாளருக்கு, முதல்தகவல் அறிக்கை சம்மந்தமாக அவருக்கு எப்போது தகவல் கிடைத்தது என்று நான் விசாரித்து, தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அ.சா.ஆ.45 முதல் தகவல் அறிக்கையில், சம்பவம் பற்றி தகவல் கிடைத்த நேரம் 11.00 மணி என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ..........

விபத்து பதிவேட்டு நகலில் அடையாளம் தெரியாத நபர்கள் என கூறப்பட்டுள்ளதற்கும், முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டுள்ள விவரத்திற்கும் உள்ள வேறுபாட்டை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன்.

18.09.2020 அன்று என்னென்ன ஆவணங்கள், எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் அந்த ஆவணங்கள் ஆய்வாளரால் விசாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டுள்ளது. அ.சா.ஆ.45 முதல் தகவல் அறிக்கையில் அஜீத் என்ற எதிரியின் பெயர் குறிப்பிடப்பட்டு, அவர் என்ன ஆயுதத்தை வைத்து, என்னென்ன காயங்களை ஏற்படுத்தினார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னர், அவர் இவ்வழக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றால் ஆய்வாளர் விசாரணையில் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

விபத்து பதிவேட்டு நகலை பதிவு செய்வதற்கு தகவல் கொடுத்த தினேஷ் என்பவர் அளித்த புகார் மனு இவ்வழக்கில் மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அ.சா.34 தினேஷ் மற்றும் அ.சா.1 சஷ்மிதா ஆகிய இருவருக்கும் இடையே 18.09.2020 அன்று காலை 9.00 மணிக்கு அலைபேசி மூலம் நடந்த அழைப்பு மூலம் பேசிய விவரம் தெரிந்துக்கொண்டேன். அந்த அழைப்பு விவரங்களை விசாரணையின்போது சேகரித்தேனா என்றால் சேகரிக்கவில்லை. அ.சா.1 சஷ்மிதா சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் அந்த அழைப்பு விவரங்களை சேகரித்து வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

கொரோனா தொற்று காரணமாக 2020 மார்ச் இறுதி முதல் 2021 ஜுலை வரை தளர்வுகளுடன் பொதுமுடக்கம் அமலில் இருந்தது. 2020 மார்ச் முதல் 2021 பிப்ரவரி தீவிர பொதுமுடக்கம் இருந்தது என்றால் படிப்படியாக முடக்கம் கொண்டு வரப்பட்டது. எந்தெந்த தேதிகளில் என்னென்ன .........

தளர்வுகள் இருந்தது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. அத்தியாவசியப்பொருட்கள் கொண்டு செல்வதற்காக தளர்வு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இரவு 9.00 மணிக்கு மேல் நான்கு நபர்களுக்கு மேல் கூடியிருக்கக்கூடாது என உத்தரவு இருந்தது. அது சம்மந்தமாக காவல்துறை கண்காணிப்பும் இருந்தது.

இவ்வழக்கிற்கு முன்விரோதமாக சம்பவத்திற்கு முன்னர் பொங்கல் திருவிழாவில் நடந்த தகராறு ஆகும். பொங்கல் விழாவை யார், எவ்வளவு காலமாக நடத்தி வருகிறார்கள் என நான் விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பொங்கல் விழாவிற்கு மைக்செட் மற்றும் பாதுகாப்பு அனுமதி சம்மந்தப்பட்ட காவல்நிலையத்தில் பெறவேண்டும். இவ்வழக்கு சம்மந்தமான பொங்கல் விழாவிற்கு அனுமதி குறித்து துலக்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொங்கல் விழாவிற்கும், இறந்துபோனவருக்கும், எதிரிகளுக்கும் என்ன சம்மந்தம் என்று விசாரித்தேன். பொங்கல்விழாவில் இருவருக்கும் பிரச்சினை என்று தெரிந்துக்கொண்டேன். பொங்கல்விழாவை யார் நடத்தினார்கள் என்று நான் விசாரிக்கவில்லை. பொங்கல்விழா நடந்தது சம்மந்தமாக நான் விசாரித்தேன். பொங்கல் விழாவிற்கும், இறந்துபோன கிருஷ்ணமூர்த்திக்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என்றும், அந்த விழாவை நடத்தும் வயதும் அவர்களுக்கு கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. பொங்கல் விழா எதுவும் நடக்கவில்லை என்றும், அதனால்தான் அது சம்மந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், அதுகுறித்து நான் தனிப்பட்ட சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

அ.சா.35 மற்றும் அ.சா.38 சாட்சிகள் செல்போன் அழைப்பு விவர அறிக்கை அளித்த சாட்சிகள். அழைப்பு விவர அறிக்கை சம்மந்தப்பட்ட பதிவுகள் இருந்த கணிணி யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது என்று நான்

விசாரித்தேனா என்றால் அந்த நிறுவனத்தின் நோடல் அதிகாரி கட்டுப்பாட்டில் இருந்தது. அந்த கணிணியை இயக்கிய நபரிடம் சான்றிதழ் வாங்கினேனா என்றால் நோடல் அதிகாரியிடம் வாங்கினேன்.

நோடல் அதிகாரி யாரிடமிருந்து அழைப்பு விவர தகவலை பெற்றார் என்று விசாரித்தேனா என்றால் நோடல் அதிகாரியின் கீழ் பணிபுரியும் பொறுப்பு அதிகாரி என்ற முறையில் நான் நோடல் அதிகாரியை விசாரித்தேன். இவ்வழக்கில் குற்றம் செய்தவர் யாரென்று தெரியாத நிலையில் படிப்படியாக எதிரிகள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.45 முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடக்கும்போது எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்ததாகவும், சம்பவத்தை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் சென்றனர் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் எண் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வழக்கை வலுப்படுத்தவேண்டும் என்பதற்காக பின்யோசனையுடன் வழக்கு சம்பவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**2, 6, 8, 9** மற்றும் **12** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கையில் 2, 3 எதிரிகள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில், பொங்கல் விழாவில் 2, 3 எதிரிகள் தகராறு செய்தனர் என கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில், காயம்பட்ட தன் கணவரை அவரும், அ.சா.2, 3 சாட்சிகளும் ஆம்புலன்சில் அழைத்துச்சென்றோம் என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.4 அஷ்வினி என்பவரை நான்தான் முதலில் விசாரித்தேன் என்றால் சரிதான்.

அ.சா.4 எனது விசாரணையில், அமராவதி மருத்துவமனை செல்வதற்காக தன் அக்காவை பார்த்து ரூ.50/- வாங்கினேன் என சொல்லியுள்ளார். எதிரி தமிழரசன் கரூர் மாவட்டம், சௌந்திராராஜபுரத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. அவர் கரூர், ராமானுஜம் நகரை சேர்ந்தவர். எதிரிகள் நண்பர்கள் என்பதற்கும், அவர்களை ஒருவருக்கொருவர் தொடர்புபடுத்துவதற்கும் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3, அ.சா.10 ஆகியோரின் வாக்குமூலங்களை 21.12.2020 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.3, அ.சா.10 சாட்சிகள் எனது விசாரணையில், 17.09.2020 அன்று இரவு 11.00 மணியளவில் "இருசக்கர வாகனத்தில்" சென்றபோது எதிரிகளை பார்த்தேன் என கூறவில்லை என்றால் சரிதான்.

அ.சா.40 உதயக்குமார் எனது விசாரணையில், 3ம் எதிரியை கைது செய்து, என்னிடம் ஒப்படைத்தேன் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3, 12 எதிரிகளை நான் சொன்னபடி, சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யப்படவில்லை என்றும், அவர்கள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும், அதனடிப்படையில் எந்தவொரு சான்றுபொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 3, 12 எதிரிகளுக்கு தொடர்புடைய ஆவணங்களை நீதிமன்றத்தில் நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.25ல் குறிப்பிட்டுள்ள செல்போன் எண் யாருடையது என்று நான் விசாரிக்கவில்லை. மேற்படி செல்போன் விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் பாதகமாகிவிடும் என்பதால், அதை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் விமல்பஷீர், தமிழரசன், துரைப்பாண்டி, அஜீத் ஆகியோரின் செல்போன் எண்களை விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அவர்களுடைய செல்போன் எண்களின் அழைப்பு விவரங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி :- எதிரிகள் விமல்பஷீர், தமிழரசன், துரைப்பாண்டி, அஜீத் ஆகியோரின் அழைப்பு விவரங்களை ஏன் தாக்கல் செய்யவில்லை?

பதில் - வழக்கிற்கு தேவையில்லை என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை.

**2, 6, 8, 9** மற்றும் **12** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி **:-**

எதிரிகளை பொய்யாக சேர்ப்பதற்காக, பின்னிட்டு வாக்குமூலங்கள் உருவாக்கப்பட்டது என்றும், அதனால்தான் ஒன்றுக்கொன்று முரண்பட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

கூடுதலாக 1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்